

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் துவாரைச்சேர்ந்த சிங்கப்பூர் தொழிலதிபர் சந்திரசேகர் சார்பில் அரசுப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 11லட்சம் மதிப்பிலான கல்வி உதவித் தொகையினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில் தொழிலதிபர் தருவார் சந்திரசேகர் ,பேரு ராஞ்சி மன்றத் தலைவர்கள் திருமதி கோகிலா ராணி நாராயணன், த.சேங்கைமாறன் மற்றும் பள்ளி ஆசிரியர் ஆசிரியைகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மருதுபாண்டியர் பள்ளி வளாகத்தில் அனைத்து வங்கிகள் சார்பில் மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 71கோடி மதிப்பிலான கல்விக் கடன் நிதியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்பூரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் ,எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் ,எஸ்.மாங்குடி, திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### இராஜபாளையம் தொகுதியில் அரசு கலை – அறிவியல் கல்லூரி தொடங்கிடுவீர்!

# இராஜபாளையம் - முதுகுடி வரை நான்கு வழிச்சாலை அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – எஸ்.தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

**சென்னை, ஏப். 3- சட்டப்பேரவையில், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய இராஜபாளையம் தொகுதி கழக எம்.எல்.ஏ., எஸ். தங்கபாண்டியன், "இராஜபாளையம் தொகுதியில் அரசு கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிட வேண்டும்!" என்றும் - "இராஜபாளையம் முதல் முதுகுடி வரை நான்கு வழிச் சாலை அமைத்திட வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தார்.**

அவர் விடுத்த கோரிக்கை வருமாறு:

**ராஜபாளையம் தொகுதியில் செயல்படுத்திய திட்டங்கள்:**

நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட, ராஜபாளையம்-சத்திரப்பட்டி இரயில்வே மேம்பாலம் அமைத்தல்; நீதிமன்றக் கட்டடம் கட்டுதல்; தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்; தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்மூலம் 864 வீடுகள் கட்டுதல்; வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம், RTO office அமிழ் ஓட்டல் அருகில் புதிதாக அமைத்தல்; 5 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேவதானம் அன்னை தவம்பெற்ற நாயகி திருக்கோயில் தெப்பத்தை சீரமைத்து, 30 ஆண்டுகளுக்குப் பிறகு நமது கழக ஆட்சியில் 12-3-2025 அன்று தெப்பத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது; ராஜபாளையம் பழைய பேருந்து நிலையம் புதுப்பிக்கப்பட்டது; ராஜபாளையம் நகராட்சிக்கு 24x7 குடிநீர் திட்டப் பணி நடைபெற்று வருகிறது; செட்டியார்பட்டி பேரூராட்சிக்கு கூடுதல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கப்பட்டது; குடிநீருக்காக 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டது;

சேத்தூர் பேரூராட்சிக்கு கூடுதல் கூட்டுக் குடிநீர்த் திட்டமும் வழங்கப்பட்டது; புதிய பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது; புதிய யூனியன் ஆபிஸ் அலுவலகம் கட்டப்பட்டுள்ளது; திருமங்கலம் -ராஜபாளையம் நான்குவழிச் சாலை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன; இதுபோன்ற எண்ணற்ற திட்டங்கள் முதலமைச்சர் அவர்களால் ராஜபாளையம் தொகுதிக்கு கொண்டு வரப்பட்டன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக இருந்த துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தை சார்ந்த இரண்டு அமைச்சர் பெருமக்களுக்கும் ராஜபாளையம் பொதுமக்கள் சார்பாக மனமார நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வனப் பகுதிகளில் அமைந்துள்ள கோவில்களுக்குச் செல்லும் பாலங்கள் மற்றும் வனப் பகுதிகளில் பொதுமக்களுக்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள வனத் துறையிடமிருந்து அனுமதி பெறுவதில் பல்வேறு சிக்கல்களும், சவால்களும் உள்ளன. ஆகவே, வனத் துறையிடம் பாலம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு அனுமதி பெறும் நடைமுறையை எளிமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைகள், ஆடு, மாடுகள் மேய்ப்பதன்மூலம் செடி, கொடிகள், பூக்கள் வளர்ந்து பசுமையாகக் காணப்படும். தற்போது அதற்கான அனுமதி இல்லை. எனவே, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஆடு, மாடுகள் மேய்க்க அனுமதி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய நிலத்தை வன விலங்குகள் சேதப்படுத்தினால் வழங்கப்படும் இழப்பீடு சதவிகிதத்தை உயர்த்த வேண்டும் என்றும், தமிழ்நாடு வனத் துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**நெசவாளர்கள் நலன் காக்கும் திட்டங்கள்:**

முன்பு பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் காஞ்சிபுரம் வீதிகளில் தங்களது தோள்களில் கைத்தறியால் நெய்த ஜவுளிகளைச் சுமந்து சென்று, விற்பனை செய்து நெசவாளர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். 1996 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான், கைத்தறிக்கு ஆண்டு முழுவதும் தள்ளுபடி மானியம்; நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் திட்டம்; நெசவாளர் குடும்ப நல நிதித் திட்டம்; நெசவாளர் இலவச குடியிருப்புத் திட்டம்; நெசவாளர்களுக்கு தனி வாரியம்; நெசவாளர்களுக்கு 500 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் போன்ற பல்வேறு திட்டங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டன. தற்போது, நமது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் 1 இலட்சத்து 68 ஆயிரம் பெடல் தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில், கட்டணமில்லா மின்சாரம் 1,000 யூனிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், 73,642 கைத்தறி விவசாயிகள்பயன் பெறும் வகையில் கட்டணமில்லா மின்சாரம் 300 யூனிட்டாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்களுக்கு கூட்டுறவு சங்கத்தின்மூலம் வழங்கிய சம்பளத்தை ரத்து செய்து அதை அரசே வழங்கி கூட்டுறவுச் சங்கத்தை பாதுகாத்தது நமது அரசு. தற்போது ஆண்டு முழுவதும் 12 மாதங்களும் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது நமது கழக அரசு.

நெசவாளர்களுக்கு வழங்கிவரும் அடிப்படை கூலியில் 10 சதவீதம், அகவிலைப்படியில் 10 சதவீதமாக கூலி உயர்வு வழங்க வேண்டும் என்று தொடர்ந்து கடந்த 10 ஆண்டுகளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் வழங்கப்படாத கூலியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்குவார் என்று நெசவாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல், இந்தக் கூலி உயர்வை தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் பெருமக்களும் மிகவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டு முழுவதும் ஜனதா ரக சேலை ரகங்களை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பென்சன் தொகை ரூபாய் 1,200-லிருந்து ரூபாய் 2,000 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். 60-வயது அடைந்த நெசவாளர்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி மீண்டும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். நெசவாளர்களுக்கு தனியாக காப்பீட்டு திட்ட அட்டை வழங்க வேண்டும். நெசவாளர்களுக்கு தனியாக ஆண்டு முழுவதும் இலவச கண் பரிசோதனை மற்றும் ஆபரேசன், ஆஸ்துமா சிகிச்சை வழங்க வேண்டும். நெசவாளர்களுக்கு ஆண்டுதோறும் தறிநாடா, அச்சு பண், விழுது, பெடல் தறி போன்ற உபகரணங்கள் வழங்க வேண்டும். நெசவாளர்களுக்கு தறியுடன்கூடிய இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். நெசவாளர்களுக்கு புங்கர் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் 50 வயதுக்குள் இறந்தால் ரூபாய் 2 லட்சம் மற்றும் 50 முதல் 60 வயதுக்குள் இறந்தால் ரூபாய் 60 ஆயிரமும் எனவழங்கியதிட்டத்தினை மீண்டும் செயல்படுத்த வேண்டும்.

சேலை, வேஷ்டி மற்றும் காடா-வை உற்பத்தி செய்ய மாறி மாறி வழங்காமல், சேலையை விருதுநகர் மாவட்டத்திற்கும், வேஷ்டியை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், காடாவை ஈரோடு மாவட்டத்திற்கும் நிரந்தரமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களும், சாதனைகளும். குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்மூலம் மாதம் 1000 ரூபாய், மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம், அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், இன்னுயிர் காக்கும் நம்மை காக்கும் 48 திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், தற்போது பட்ஜெட்டில் அறிவித்த சிறப்பான திட்டங்கள்-மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி, தாயுமானவர் திட்டம்: பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவித் தொகை மாதம் ரூ 2,000 மற்றும் 1,125 மின் பேருந்துகள். அதேபோல், அனைத்து மாநகராட்சிகளிலும் முதல்வர் படிப்பகம், அன்புச்சோலைமூலம் முதியோர் பகல் நேர பராமரிப்பு மையம், ஒரு லட்சம் மகளிர்களை தொழில்முனைவோர் ஆக்கும் சிறப்பு திட்டங்கள், 5 இலட்சம் புதிய பட்டாக்கள் வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே இவ்வளவு திட்டங்களை கொண்டு வந்த ஓர் முதலமைச்சர் என்றால், அது நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் பதிவிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பா-க்கு ஓர் கவிதை. அன்பு என்றால் தாய்; அக்கறை என்றால் அக்கா; ஆதரவு என்றால் அண்ணன்; பாசம் என்றால் தம்பி; பரிவு என்றால் தங்கை; நட்பு என்றால் நண்பன்; அத்தனையும் கொண்டவர்தான் அப்பா.. அவர்தான் நம் முதல்வர் அப்பா. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் வாழ்க, தமிழ்நாடு வெல்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பல்லாண்டு பல்லாண்டு வாழ்க, வாழ்க எனக் கூறி இராஜபாளையம் தொகுதியில் வளர்ச்சி திட்டப்பணிகளான

1.அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

2.சங்கரன்கோவில் முக்கு முதல் முதுகுடி நான்கு வழிச்சாலை வரை உள்ள இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற வேண்டும்.

3.இராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ள நீர்காத்த அய்யனார் கோவிலுக்குச் செல்ல பாலம் அமைக்க வேண்டும்.

4.அய்யனார் கோவில் சாஸ்தா கோவில் மற்றும் சஞ்சீவி மலைப்பகுதிகளை சுற்றுலா தலமாக தரம் உயர்த்த வேண்டும்.

எனது இக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கோருகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பரமக்குடி தொகுதி – கமுதி ஒன்றியம் – அபிராமம்

# முத்துவிஜயபுரம் குழந்தைகள் மையத்திற்கு கட்டிடம் கட்டித்தாரீர்!

## சட்டப் பேரவையில் - செ. முருகேசன் கோரிக்கை!

சென்னை, ஏப்.4- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**செ. முருகேசன்:** பரமக்குடி தொகுதி, கமுதி ஒன்றியம், அபிராமம் முத்துவிஜயபுரம் குடியிருப்பிலுள்ள குழந்தைகள் மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?



**அமைச்சர் பி. கீதா ஜீவன் :** இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, கமுதி குழந்தைகள் வட்டார வளர்ச்சி மையம், அபிராமம், முத்துவிஜயபுரம் குடியிருப்பிலுள்ள குழந்தைகள் மையத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டில் மகாத்மா தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட ஒருங்கிணைப்புடன் 11 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அப்பணிகள் நிறைவு பெற்று அபிராமம், முத்துவிஜயபுரம் குடி யிருப்பிலுள்ள குழந்தைகள் மையமானது 2024 ஆம் ஆண்டு முதல் அப்புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### மதுரை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி

# ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக நிர்வாகிகளுக்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஏப். 4- மதுரை தெற்கு மாவட்ட பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகளுக்கு வரும் 5ஆம் தேதி நேர்காணல் நடைபெற உள்ளதாக மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார், அதன் விபரம்



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படியும், மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா வழிகாட்டுதல் படியும் மதுரை தெற்கு மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி ஆகிய தொகுதிகளில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களின் பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நாளை (05.04.2025-சனிக்கிழமை) காலை 10 மணியளவில் திருமங்கலத்தில் உள்ள தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது

இதில் பொறியாளர் அணி மாநில துணை செயலாளர், மண்டல பொறுப்பாளர் கலை கார்த்திகேயன் மற்றும் பொறியாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். மாவட்ட மாநில பொறியாளர் அணி செயலி மூலம் பதிவு செய்தவர்கள் நேர்காணலில் பங்கேற்கும்படியும், கழகத்தினரும் இந்நிகழ்வில் பங்கேற்கும் படியும் தமது அறிக்கையில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தெரிவித்துள்ளார்

### தேனி மாவட்டம் 3ஆவது புத்தகத் திருவிழாவில்

# ரூ.32.5 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை!

தேனி, ஏப். 4- தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட மேனகா மில் மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்திய 3ஆவது புத்தகத் திருவிழா 23.03.2025 அன்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பெரியசாமி அவர்களால், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டு, 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்று 01.04.2025அன்றுடன் இனிதே நிறைவுற்றது.

இப்புத்தகத் திருவிழாவில் தினந்தோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், உள்ளூர் கவிஞர்கள், எழுத்தாளர்களின் இலக்கிய அரங்கம், முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகள், பல்சுவை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

இப்புத்தகத் திருவிழாவை பார்வையிட வருகை தந்த பொதுமக்கள் மற்றும் மாணவ -மாணவியர்கள்வசதிக்காகமாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த 10 நாட்கள் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் ரூ.32.5 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், புத்தகத் திருவிழாவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற உள்ளூர் கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் கிராமிய கலைஞர்களுக்கு நினைவுப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# சோழவந்தான் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும்!

## சட்டப் பேரவையில் - ஆ.வெங்கடேசன் வலியுறுத்தல்!

சென்னை, ஏப். 4- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேசிய சோழவந்தான் தொகுதி கழக எம்.எல்.ஏ., ஆ.வெங்கடேசன், "சோழவந்தானில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்திட வேண்டும்" என கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**அ.வெங்கடேசன்:** சோழவந்தானில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** மதுரை மாவட்டம், சோழவந்தான் அரசு மருத்துவமனை 1940 ஆம் ஆண்டு Maternity home ஆக ஆரம்பிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு முதல் வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக 20 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில், உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, மகப்பேறு சிகிச்சை பிரிவு, பல் சிகிச்சை பிரிவு, சித்தா பிரிவு, ஆய்வகம், உடற்கூறாய்வு பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, தொழுநோய் பிரிவு, ECG, Ultrasound, Scan போன்ற பல்வேறு வசதிகளும், 5 மருத்துவர்களும், 6 செவிலியர்களு



டனும் இங்கே சிறப்பாக பணியாற்றி வருகின்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், ஏற்கெனவே வைத்த கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று 15 ஆவது நிதி ஆணையத்தின்கீழ் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் இதே மருத்துவமனை வளாகத்தில் பழையக் கட்டடங்களை எடுத்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

**ஆ. வெங்கடேசன்:** மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மருத்துவமனையை தரமுயர்த்தி, கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படும் என்று கூறினார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனையில் கூடுதல் படுக்கை மற்றும் CT scan வசதிகளை அமைச்சர் செய்து தருவார்களா?

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** அரசு மருத்துவமனைக்கு குறிப்பாக வட்டம் சாரா அரசு மருத்துவமனைக்கு என்னவெல்லாம் வசதிகள் தேவையோ அந்த வசதிகளெல்லாம் தற்போதும் இருக்கின்றன. இன்னமும்கூட $3\frac{1}{2}$ கோடி ரூபாயில் புதிய கட்டடமும் வரவிருக்கிறது. அந்தக் கட்டடத்திற்குத் தேவையான மருத்துவ உபகரணங்களும் வாங்கித் தரப்படும்.

**ஆ. வெங்கடேசன்:** கச்சை கட்டி மற்றும் அம்பலத்தடி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டி திறக்கப்படும் தருவாயில் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள், அவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு எப்போது அளிப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

பாலமேடு பகுதியில் 108 ஆம்புலன்ஸ் வசதி வேண்டும் என்று வெகுநாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

அமைச்சர் அவர்கள் சென்ற மாதம் அங்கு வந்திருந்தபோது அதுகுறித்து கோரிக்கை வைத்தோம்.

அக்கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இது மக்கள் பயன்பாட்டிற்கு எப்போது அளிக்கப்படும்?

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகிய வற்றிற்கான கூடுதல் கட்டடங்களை அடுத்து வருகிற பேரவை விடுமுறை நாட்களில் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



நாகர்கோவில் மாநகராட்சி, வடக்கு மற்றும் கிழக்கு மண்டல அலுவலகங்கள் திறப்பதற்கான ஏற்பாடுகளை மாநகராட்சி அதிகாரிகளுடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர் நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, மண்டலத் தலைவர் இ.ஜவகர், சுகாதார அலுவலர்கள் ராஜா, ராஜராம், இளநிலை பொறியாளர் பாஸ்கர், மாமன்ற உறுப்பினர் நெ.கலாராணி, மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.